## சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – உலமாக்கள் மற்றும் பணியாளர் நல வாரியம் – நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களின் பதிவை புதுப்பித்தல் காலத்தினை 3 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகளாக உயர்த்தி ஆணை வெளியிடப்படுகிறது.

---

## பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (எஸ்1)த் துறை

அரசாணை (நிலை) எண். 45

நாள் 03.06.2020
சார்வரி, வைகாசி 21
திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்கப்பட்டது :–

1. அரசாணை (நிலை) எண். 74, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (எஸ்1)த் துறை, நாள் 24.08.2009.
2. அரசாணை (நிலை) எண்.84, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (எஸ்1)த் துறை, நாள் 18.09.2009.
3. அரசாணை (நிலை) எண்.134, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (ஐ1)த் துறை, நாள் 18.11.2014.
4. சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநரின் கடித எண்.அ6/1287/2020, நாள் 18.03.2020.

******

**ஆணை:-**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் அமைக்கப்பட்டு, இவ்வாரியங்களில் பதிவு செய்து கொள்ளும் உறுப்பினர்களுக்கு அமைப்பு சாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டதைப் போன்று, பல்வேறு நலத்திட்டங்கள் வழங்க ஆணையிடப்பட்டது. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், நல வாரியத்தில் பல்வேறு நல உதவிகள் செயல்படுத்துவதற்கான வழிகாட்டி நெறிமுறைகள் உருவாக்கப்பட்டும், மேலும், உறுப்பினர்கள் பதிவு செய்து மூன்றாண்டு முடியும் தருவாயில் மீண்டும் பதிவை புதுப்பிக்க வேண்டும் எனவும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியம் மற்றும் இதர 14 நல வாரியங்களில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கான பதிவை புதுப்பித்தல் காலம் இரண்டு ஆண்டிலிருந்து ஐந்து ஆண்டுகளாக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநரின் கடிதத்தில், உலமாக்கள் மற்றும் இதர பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர் பதிவை புதுப்பித்தல் காலம் 3 ஆண்டிலிருந்து 5 ஆண்டுகள் உயர்த்தி வழங்கும்பட்சத்தில், முதியோர்கள் ஓய்வூதியம் உள்ளிட்ட அனைத்து நலத்திட்ட பயன்களை உரிய காலக்கெடுவிற்குள் விதிமுறைகளுக்குட்பட்டு பெற இயலும் என்பதால், பார்வை மூன்றில் காணும் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறை அரசாணையில் உறுப்பினர் பதிவை புதுப்பித்தல் காலம் உயர்த்தி உத்தரவிடப்பட்டது போன்று, உலமாக்கள் மற்றும் இதர பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர் பதிவை புதுப்பித்தல் காலம் 3 ஆண்டிலிருந்து 5 ஆண்டுகளாக உயர்த்தி ஆணைகள் வெளியிடுமாறு அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. சிறுபான்மையினர் நலத் துறை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, உலமாக்கள் மற்றும் இதர பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர் பதிவை புதுப்பித்தல் காலம் 3 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகளாக உயர்த்தி ஆணை வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

சந்தர மோகன். B
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை – 2.
இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, சென்னை – 5.
இயக்குநர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை, சென்னை – 5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தின் தலைவர் மற்றும் அனைத்து அலுவல் சாரா உறுப்பினர்கள் (உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரிய உறுப்பினர்–செயலர் வழியாக)
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித் துறை, சென்னை – 9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறை, சென்னை – 9.
அரசு செயலாளர், சமூக நலம் (ம) சத்துணவுத் துறை, சென்னை– 9.
அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை – 9.
அரசு முதன்மைச் செயலாளர், உயர் கல்வித் துறை, சென்னை – 9.
ஆணையர், தொழிலாளர் நலத்துறை, சென்னை – 6.
முதன்மைச் செயல் அலுவலர், தமிழ்நாடு வக்ஃப் வாரியம், சென்னை–1.
இயக்குநர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை – 6.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், சென்னை – 2.
மாநிலக் கணக்காயர், சென்னை–18/35.
மாநிலக் கணக்காயர் (தணிக்கை-I&II), சென்னை–18.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 5.

<u>நகல் :-</u>

மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் வக்ஃபு அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலர், சென்னை–9.
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

3/6/2020
பிரிவு அலுவலர்